செ.வெ.எண்.479/2021 நாள்.25.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருப்பத்தூர் மாவட்டதிற்கு தமிழக அரசால் நியமனம்செய்யப்பட்டுள்ள 10 சட்ட அலுவலர்களுக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருப்பத்தூர் மாவட்டதிற்கு தமிழக அரசால் நியமனம்செய்யப்பட்டுள்ள 10 சட்ட அலுவலர்களுக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் திரு.பி.டி.சரவணன் அவர்களுக்கும், திரு.எம்.சரவணன் அவர்களுக்கும், திருப்பத்தூர் சார்பு நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் திரு.யோகேஷ்குமார் அவர்களுக்கும், திரு.எம்.பி.இராஜகுமாரன் அவர்களுக்கும், வாணியம்பாடி சார்பு நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் திரு.எஸ்.செந்தில்வேலன் அவர்களுக்கும், திரு.பி.எஸ்.சுரேஷ்குமார் அவர்களுக்கும், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.வீரமணி அவர்களுக்கும், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திருமதி.இந்திரா அவர்களுக்கும், வாணியம்பாடி மாவட்ட முதன்மை நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.ஜி.பூபதி அவர்களுக்கும், ஆம்பூர் மாவட்ட முதன்மை நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.பி.இரமேஷ்பாபு அவர்களுக்கும் என மொத்தம் 10 சட்ட அலுவலர்கள் நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேலும் அனைத்து சட்ட அலுவலர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மற்றும் நல்ல சிறப்பாக பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) திரு.வில்சன்ராசசேகர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் திரு.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.சுப்பிரமணி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**